# <u>மணப்பாறை நகராட்சி</u>

**2018 – ஆம் ஆண்டு மார்ச் மாதம் (28.03.2018) 28 –ஆம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள்</th><th>தீர்மானம்</th></tr>
<tr><td>28.03.2018</td><td>

**பொருள் – 1**

தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பின் படி நகராட்சி / மாநகராட்சிகளில் செயல்படும் தனியார் கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் அவை சம்மந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர அனைத்து கல்வி நிறுவனங்களுக்கு சொத்து வரி விதிக்க, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920, 5ன் பிரிவு 83–ல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.749/2018/அ1)

</td><td>

**தீர்மான எண்.307**
**அனுமதிக்கப்பட்டது.**

</td></tr>
<tr><td>28.03.2018</td><td>

**பொருள் – 2**

இந்நகராட்சி குடிநீர் நிதி 2017–2018 ஆம் ஆண்டு நிதியின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு 11.10.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை</th><th>ஒப்பந்தாரரின் பெயர்</th><th>விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td rowspan="2">இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 ராஜீவ் நகர் பகுதி (அய்யர் குளத்தில்) உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து பைப்லைன் மற்றும் HDPE Tank அமைத்தல் பணி</td><td rowspan="2">1,00,000/–</td><td>திரு. கே.ராமசாமி</td><td>–0.03% மதிப்பீட்டு விலை விகித்தை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. எ.அருள்சௌந்தர்ராஜ்</td><td>0.49% மதிப்பீட்டு விலை விகித்தை விட அதிகம்</td></tr>
</table>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு. திரு. கே.ராமசாமி என்பவர் –0.03% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிடவும் மற்ற ஒப்பந்தபுள்ளியைவிடவும் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்கவும், குடிநீர் விநியோகப் பணியின் அவசர அவசியம் கருதியும் பொது மக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே.ராமசாமி ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை

</td><td>

**தீர்மான எண். 308**
**அனுமதிக்கப்பட்டது.**

</td></tr>
</table>

மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

---

28.03.2018

**பொருள் – 3**

இந்நகராட்சி குடிநீர் நிதி **2017–2018** ஆம் ஆண்டு நிதியின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு **11.10.2017** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்தாரரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23 திண்டுக்கல் ரோட்டில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து பைப்லைன் மற்றும் HDPE Tank அமைத்தல் பணி | 50,000/– | திரு. கே.ராமசாமி | –0.03% மதிப்பீட்டு விலை விகித்தை விட குறைவு |
| 2 | | | திரு. ஏ.அருள்சௌந்தர்ராஜ் | 1.19% மதிப்பீட்டு விலை விகித்தை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு. திரு. கே.ராமசாமி என்பவர் –0.03% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிடவும் மற்ற ஒப்பந்தபுள்ளியைவிடவும் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்கவும், குடிநீர் விநியோகப் பணியின் அவசர அவசியம் கருதியும் பொது மக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே.ராமசாமி ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.309**
**அனுமதிக்கப்பட்டது.**

---

28.03.2018

**பொருள் – 4**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**1558/J1/2015** நாள்.**29.10.2015**ன் படியும், துணை இயக்குநர் சுகாதார பணிகள் திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண்.**3145/24/2014** நாள்.**03.07.2014**–ன் படியும் மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சி அவர்களின் கூட்ட அறிவுரையின்படியும் மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளில் டெஙகு காய்ச்சல் போன்ற கொசுக்களினால் பரவும் நோய்களை கட்டுப்படுத்த இந்நகராட்சி மாதா சுய உதவிக்குழுவினர் **15** நபர்கள் மூலம் கொசுப்புழு உற்பத்தி இடஙகளை கண்டறிதல், அழித்தல், புகைமருந்து அடித்தல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இவர்களது பணிக்காலம் **13.03.2018** உடன் முடிவடைகிறது. எனவே கொசு ஒழிப்பு மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணிகளின் அவசியம் கருதி **15.03.2018** முதல் **14.05.2018** வரையிலான காலஙகளுக்கு பணி நீட்டிப்பு செய்யவும் அதற்கான தோராய செலவினம் மாவட்ட ஆட்சியர் விலை விகிதம் ரூ.**295** –ன் படி தொகை ரூ.**295** X15X52 = ரூ.**2,30,100/–** (இரண்டு லட்சத்து முப்பதாயிரத்து நூறு மட்டும்

**தீர்மான எண்.310**
**அனுமதிக்கப்பட்டது.**

| | | |
|---|---|---|
| | ) பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.<br>( ந.க. எண். 5386/2016/ எச்.1 ) | |
| 28.03.2018 | **பொருள் – 5**<br>நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1558/J1/2015 நாள்.29.10.2015 ன் படியும், துணை இயக்குநர் சுகாதார பணிகள் திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண்.3145/24/2014 நாள்.03.07.2014–ன் படியும் மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சி அவர்களின் கூட்ட அறிவுரையின்படியும் மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளில் டெங்கு காய்ச்சல் போன்ற கொசுக்களினால் பரவும் நோய்களை கட்டுப்படுத்த இந்நகராட்சி அறிஞர் அண்ணா மகளிர் சுய உதவிக்குழுவினர் 20 நபர்கள் மூலம் கொசுப்புழு உற்பத்தி இடங்களை கண்டறிதல், அழித்தல், புகைமருந்து அடித்தல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இவர்களது பணிக்காலம் 13.03.2018 உடன் முடிவடைகிறது. எனவே கொசு ஒழிப்பு மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணிகளின் அவசியம் கருதி 15.03.2018 முதல் 14.05.2018 வரையிலான காலங்களுக்கு பணி நீட்டிப்பு செய்யவும் அதற்கான தோராய செலவினம் மாவட்ட ஆட்சியர் விலை விகிதம் ரூ.295 –ன் படி தொகை ரூ.295 X20X52 = ரூ.3,06,800/– (மூன்று லட்சத்தி ஆராயிரத்து எட்நூறு மட்டும் ) பொது நிதியிலிருந்து செலவிடவும் கூட்ட அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.<br>( ந.க. எண். 4562/2014/ எச்.1 ) | **தீர்மான எண்.311**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 28.03.2018 | **பொருள் – 6**<br>இந்நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செம்மையாக செயல்படுத்தும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4294/2016/பி3 நாள்.03.03.2016ல் 72 பணியாளர்கள் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் நியமனம் செய்ய அனுமதி அளித்ததன் பேரிலும், இந்நகராட்சி தீர்மான எண்.279 நாள்.26.12.2017ன் படி ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி அளித்ததன் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விபரப்படி இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>மதிப்பீடு ரூ.88.28 இலட்சம் | **தீர்மான எண். 312**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் முகவரி | மதிப்பீட்டு வித்தியாச (%) |
|---|---|---|
| 1 | Saram Enviro service Pvt Ltd.<br>32/19,2nd Floor, 615 Main Raod,<br>Mugapair West Chennai 37. | - 0.25 |

| | | | |
|---|---|---|---|
| 2 | BSS Facility services Pvt Ltd,<br>38 MGR Street, Sathiya Nagar,<br>Kandan Chavadi , Chennai -96 | + 0.24 | |

மேற்காணும் இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.25 சதவீதம் குறைவாக வழங்கிய Saram Enviro service Pvt Ltd. Chennai -37 நிறுவனத்தின் ஒப்பதப்புள்ளியினை ஏற்க கூட்டப்பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.

( ந.க. எண். 74/2015/ எச்.1 )

28.03.2018

**பொருள் – 7**

மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமன புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண்.20–க்கு 20.03.2018 ல் இரண்டாம் அழைப்பு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பொது ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித் தொகை கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச கேள்வித் தொகை |
|---|---|---|
| 1. | திரு.கேஅமீர்பாட்ஷா, த.பெ.காசிம், 227/சி4, கோவிந்தராஜபுரம், கோவில்பட்டி ரோடு, மணப்பாறை. | 6300/– |
| 2. | திரு.எம்.அயூப்கான், 89/10 நேருஜி நகர், மணப்பாறைபட்டி ரோடு, மணப்பாறை. | 6400/– |

மேற்கண்ட ஏலக்கேள்வித் தொகை குறைவாக உள்ளதால் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி / ஏலம் கோர நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

(025/2018/அ2)

**தீர்மான எண். 313**

**அனுமதிக்கப்பட்டது.**

28.03.2018

**பொருள் – 8**

இந்நகராட்சி பொது பிரிவில் சுகாதார பிரிவில் உள்ள லாரி வகனஙகள் TDY 1660, TAX 2402 , TN45AZ 2257 ஆகியவற்றிற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் சாலை வரி செலுத்தவும் அதற்கான தோராய செலவினம் ரூ.15,000/– பொது நிதியிலிந்து மேற்கொள்ள கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமையை அங்கீகரிக்கலாம்.

(201 /2018/எச்2)

**தீர்மான எண்.314**
**அனுமதிக்கப்பட்டது.**

---

28.03.2018

**பொருள் – 9**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில், நகரின் முக்கிய சாலைகள், பொது கழிப்பறை சுற்றிய பகுதிகள், பேருந்து நிலைய பகுதி ஆகிய பகுதிகளின் சுகாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் கிருமி நாசினியான சுண்ணாம்புத்தூள், பொது சுகாதார அவசர அவசியம் கருதி அரசு அல்லது அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து நீர்த்த சுண்ணாம்புத்தூள் 16 டன் வாங்கிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1.46 லட்சம் (ஒரு லட்சத்தி நாற்பத்தி ஆறாயிரம் மட்டும்) மேற்கொள்ள கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.159 /2018/எச்1)

**தீர்மான எண்.315**
**அனுமதிக்கப்பட்டது.**

---

28.03.2018

**பொருள் – 10**

இந்நகராட்சி பொது சுகாதார லாரி TDY 1660 –க்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு மராமத்து செய்ய நகர்மன்றத் தீர்மான எண்.295 நாள் 02.02.2018 –ன்படி அனுமதி அளித்ததன் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விபரப்படி இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | பெயர் | டேவணித் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.எஸ்.ஜான் பீட்டர்,<br>ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பைப்பாஸ் ரோடு,<br>பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை. | 350<br>12041<br>20.3.18 | 34800 |
| 2. | திரு.எஸ்.ராஜசேகர்,<br>சேகர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பைப்பாஸ் ரோடு, மணப்பாறை. | 350<br>12045<br>20.3.18 | 35500 |

மேற்காணும் இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.எஸ்.ஜான் பீட்டர்,

**தீர்மான எண்.316**
**அனுமதிக்கப்பட்டது.**

ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், நிறுவன ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க கூட்டப்பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்.

---

28.03.2018

**பொருள் – 11**

இந்நகராட்சி பொது சுகாதார லாரி TAX 2402 –க்கு தகுதிச்சான்று பெற மராமத்து செய்யும் பொருட்டு செலவினம் மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மான எண்.294 நாள் 02.02.2018 –ல் நிர்வாக அனுமதி அளித்ததன் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி விபரம் | டேவணித் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.எஸ். ராஜசேகர், சேகர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை. | 350<br>12044<br>20.3.18 | 35300 |
| 2. | திரு.எஸ்.ஜான் பீட்டர், ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை. | 350<br>12040<br>20.3.18 | 34900 |

மேற்காணும் இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.எஸ்.ஜான் பீட்டர், ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மணப்பாறை ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க கூட்ட அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.203/2018/எச்1)

**தீர்மான எண்.317**
**அனுமதிக்கப்பட்டது.**

---

28.03.2018

**பொருள் – 12**

இந்நகராட்சி பொது சுகாதார லாரி TN45AZ 2257 –க்கு தகுதிச்சான்று பெற மராமத்து செய்யும் பணிக்கு நகர்மன்றத் தீர்மான எண்.293 நாள் 02.02.2018 –ன்படி அனுமதி அளித்ததன் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விபரப்படி இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | பெயர் மற்றும் விபரம் | டேவணித் தொகை | ஒப்பந்த தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.எஸ்.ஜான் பீட்டர், ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை. | 420<br>12042<br>20.3.18 | 41800/– |

**தீர்மான எண். 318**
**அனுமதிக்கப்பட்டது.**

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2.</td><td>திரு.எஸ். ராஜசேகர், சேகர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பைப்பாஸ் ரோடு, மணப்பாறை.</td><td>420<br>12043<br>20.3.18</td><td>42400/–</td></tr>
</table>
வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.எஸ்.ஜான் பீட்டர், ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.202/2018/எச்–1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>28.03.2018</td>
<td>
பொருள் – 13<br>
நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண்.2571/2017/J1 நாள்.28.11.2017 ன்படி கொசுக்களினால் பரவும் நோய்களை கட்டுப்படுத்த கொசுப்புழு கண்டறியும் பணியாளர்களை (DBC) ஆண்டு முழுவதும் பயன்படுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் Outsourcing முறையில் மாவட்ட ஆட்சியர் விலை விகிதம் ESI, EPF ஆகியவற்றுடன் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>
தற்சமயம் மணப்பாறை நகராட்சியில் சுய உதவிக் குழுவினர் 35 நபர்கள் மூலம் கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். அவர்களது பணிக்காலம் 13.05.2018 உடன் முடிவடைகிறது. எனவே நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுரையின்படி ஓராண்டு காலத்திற்கு ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக 35 நபர்களை கொண்டு Outsourcing முறையில் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.41.6 இலட்சம் (ரூ.380.66 x 26 x 12 மாதம் x 35 நபர்கள்) பொது நிதியிலிருந்து செலவிடவும், மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி கோர நாளிதழ் கட்டணம் செலுத்தவும் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
அனுமதிக்கலாம்<br>
(2784 /2017/எச்1)
</td>
<td>தீர்மான எண்.319<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>28.03.2018</td>
<td>
பொருள் – 14<br>
நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.429/2016/பி3 நாள்.03.03.2016 ன் படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு 72 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் நியமனம் செய்யப்பட்டது.<br>
மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண். 279 நாள்.26.12.2017 ல் ஒப்பந்தப்புள்ளி கோரி விளம்பரம் செய்ய அனுமதி அளித்ததன் பேரில், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, சென்னை அவர்கள் மூலம் accord விளம்பர நிறுவனத்தின் மூலம் டெக்கான் இரானிக்கல் (ஆஙகிலம்), மக்கள் குரல் (தமிழ்) ) ஆகிய நாளிதழில்
</td>
<td>தீர்மான எண்.320<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | விளம்பரம் செய்த வகையில் விளம்பர கட்டணம் ரூ.53865/– accord விளம்பர நிறுவனம், சென்னை அவர்களுக்கு வழங்க கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண்.74/2015/எச்1) | |
| 28.03.2018 | **பொருள் – 15**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் தெருநாய்களை பிடித்து, கருத்தடை அறுவை செய்து தடுப்பூசி போடும் பணிக்கு, கணக்கீட்டின்படி 767 தெரு நாய்களுக்கு உண்டான தோராய செலவினம் 767 X ரூ.445 = ரூ.3.42 இலட்சமாகும். மேற்காணும் தெருநாய் கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் தடுப்பூசி போடும் பணியினை விலங்குகள் நல வாரிய செயலர் அவர்களின் கடிதம் ந.க.எண்.24–1/2016–1/AWB நாள்.30.06.2017–ன் படி விலங்குகள் நல வாரியத்தில் பதிவு செய்த நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்கான தோரய செலவினம் ரூ.3.42 இலட்சத்திற்கு கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>(ந.க. எண்.1495 /2017/எச்1) | **தீர்மான எண். 321**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 28.03.2018 | **பொருள் – 16**<br>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திருச்சி அவர்களின் கடிதம் F.Try/1114/GS/DEE/TNPCB/TRY/2018 நாள்23.03.2018ன் படி மணப்பாறை நகராட்சி Gasifier Crematorium –க்கு செலுத்தப்பட வேண்டிய இசைவானை கட்டணம் காற்று மற்றும் நீர் சட்டங்களின் படி ரூ.7500 + ரூ.7500 = ரூ,15,000/– செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள கூட்ட அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>அனுமதிக்கலாம் ( 717/2018/எச்1 ) | **தீர்மான எண்.322**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 28.03.2018 | **பொருள் – 17**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள லாரி வாகனங்களுக்கு வட்டார போக்குவரத்து அலுவலகம் மற்றும் வாகன காப்பீடு நிறுவனத்திற்கு 2018–19 ம் ஆண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய காப்பீடு தொகை, சாலை வரி, பசுமை வரி, சேவை கட்டணம், தகுதிச்சான்று கட்டணம் செலுத்தவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1.4 இலட்சம் செலவிடவும் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். ( 201/2018/எச்1) | **தீர்மான எண். 323**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 28.03.2018 | **பொருள் – 18**<br>இந்நகராட்சியின் பொதுப்பிரிவு பணியாளர்களுக்கு 2018–19ம் ஆண்டிற்கு பயணப்பட்டியல் தொகை வழங்க உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.324 அனுமதிக்கப்பட்டது.** |
| 28.03.2018 | **பொருள் – 19**<br>இந்நகராட்சியின் குடிநீர் பிரிவு பணியாளர்களுக்கு 2018–19ம் ஆண்டிற்கு பயணப்பட்டியல் தொகை வழங்க உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 325 அனுமதிக்கப்பட்டது.** |
| 28.03.2018 | **பொருள் – 20**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தின் கடை எண்.26–க்கு 28.03.2018–ம் தேதிய மூன்றாம் அழைப்பு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஏலக்கேள்வி கோரியுள்ளனர். ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை. | **தீர்மான எண். 326 அனுமதிக்கப்பட்டது.** |

| வ. எண் | ஏலதாரர் பெயர் | ஏலக்கேள்வி தொகை |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.சக்திவேல், 88/2, காந்தி நகர், மணப்பாறை | ரூ.6700/– |
| 2. | திரு.எம்.மெகபர் அலி, த/பெ. முகமது காசிம், புத்தாநத்தம். | ரூ.6900/– |

கோரப்பட்ட இரண்டு ஏலக்கேள்வித் தொகையில் திரு. எம்.மெகபர் அலி, த/பெ. முகமது காசிம் என்பவர் ஒரு மாத வாடகையாக ரூ.6900/–க்கு உயர்ந்த பட்ச ஏலம் கோரியுள்ளார்.

உயர்ந்தபட்ச கேள்வித் தொகை கோரியுள்ள திரு.எம்.மெகபர் அலி, த/பெ. முகமது காசிம், புத்தாநத்தம் அவர்களுக்கு புதிய பேருந்து நிலைய கடை எண்.26 –ஐ ஒப்படைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அரசு மதிப்பைவிட கூடுதலாக ஏலக்கேள்வி கோரியுள்ளதால் திரு.எம்.மெகபர் அலி என்பவரின் ஏலக்கேள்வித் தொகை ரூ.6900/– ஐ ஏற்க அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 28.03.2018 | **பொருள் – 21**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை ஏலம் / ஒப்பந்தப்புள்ளியை தமிழ் நாளிதழில் பிரசுரம் செய்தமைக்கான விபரம் கீழ்க்கண்டவாறு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. | **தீர்மான எண். 327 அனுமதிக்கப்பட்டது.** |

| வ. எண் | குத்தகை இனங்கள் | ஏல நாள் | பிரசுரம் செய்த நாள் | நாளிதழ் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | வார கால்நடை சந்தையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளுதல் உரிமம் | 20.02.2018 | 02.02.2018 | தினமலர் | ரூ.12,642 |
| | வார காய்கனி சந்தையில் கட்டணம் வசூல் | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | செய்து கொள்ளுதல் உரிமம் | | | | | | |
| | | | ஆடு அடிக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளுதல் உரிமம் | | | | | | |
| | | | கால்நடை மற்றும் காய்கனி சந்தையில் குப்பை சேகரித்துக் கொள்ளும் உரிமம் | | | | | | |
| | | | பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளுதல் உரிமம் | | | | | | |
| | | | நாளங்காடி கட்டண கழிப்பிடம் குழியலறையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளுதல் உரிமம் | | | | | | |
| | | | பார்க் ரோட்டில் ஆடு அடிக்கும் தொட்டி அருகில் கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளுதல் உரிமம் | | | | | | |
| | | | புதிய பேருந்து நிலையத்தில் பொருள்கள் பாதுகாப்பு வைப்பறை கட்டணம் வசூல் செய்து கொள்ளுதல் உரிமம் | | | | | | |
| | | 2 | பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளுதல் உரிமம் | 02.03.2018 | 24.02.2018 | தினபூமி | ரூ.10,856 | | |
| | | | நாளங்காடி கட்டண கழிப்பிடம் குளியலறையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளுதல் உரிமம் | | | | | | |
| | | | புதிய பேருந்து நிலையத்தில் பொருள்கள் பாதுகாப்பு வைப்பறை கட்டணம் வசூல் செய்து கொள்ளுதல் உரிமம். | | | | | | |
| | | 3 | புதிய பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள வணிக வளாக கடை எண்.20,26,27 உள்ள கடைகள் ஏல உரிமை | 20.03.2018 | 08.03.2018 | மாலை மலர் | ரூ.4568 | | |
| | | | நாளங்காடி நுழைவு வாயில் புதிய கடை எண்.4 | | | | | | |
| | | | பார்க் ரோட்டில் ஆடு அடிக்கும் இடத்தில் உள்ள 1 முதல் 8 வரை உள்ள கடைகள் ஏல உரிமை | | | | | | |
| | | | கோவில்பட்டி ரோடு நகராட்சி தொடக்கப்பள்ளி அருகில் வணிக வளாக முதல் தளத்தில் கடை எண்.6 மட்டும் | | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நாளங்காடி கட்டண கழிப்பிடம் குளியலறையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளுதல் உரிமம் | | | | |
| | பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளுதல் உரிமம் | | | | |
| | புதிய பேருந்து நிலையத்தில் பொருள்கள் பாதுகாப்பு வைப்பறை கட்டணம் வசூல் செய்து கொள்ளுதல் உரிமம் | | | | |
| **கூடுதல்** | | | | | **ரூ.28066/–** |

விளம்பரம் செய்யப்பட்ட தொகை **ரூ.28066/–**ஐ Bright Advertising என்ற நிறுவனத்திற்கு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.025/2018/அ2)

---

28.03.2018

**பொருள் – 22**

நகராட்சிக்கு சொந்தமான நாளஙகாடி கட்டண குளியலறை மற்றும் கழிப்பறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி **28.03.2018**ல் (நான்காம் அழைப்பு) கோரியதில் சென்ற ஆண்டைவிட குறைவாகவும், மூன்றாண்டு சராசரியைவிட குறைவாகவும், ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரிய விபரஙகள் கீழ்க்குறிப்பிடுள்ளவாறு

பொது ஏலம் – யாரும் கலந்துகொள்ளவில்லை.

**ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள்.**

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | கேள்வித்தொகை |
|---|---|---|
| **1** | எம்.முத்து, **8**, வெள்ளையன் தெரு, மணப்பாறை | **ரூ.1,55,600/–** |
| **2** | எம். மணிகண்டன்,**5**, அண்ணா நகர், மணப்பாறை. | **ரூ.1,52,100/–** |

ஒப்பந்தப்புள்ளியின் அதிகபட்ச கேள்வித் தொகை மூன்றாண்டு சராசரியைவிட குறைவாகவும், சென்ற ஆண்டைக்காட்டிலும் குறைவாக உள்ளதாலும் மறு ஏலம் கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

குத்தகை காலம் **31.03.2018–**ல் முடிவுற்றதால், **01.04.2018** முதல் குத்தகைக்கு விடும் காலம் வரை துறை மூலம் வசூல் செய்ய அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.328**

**அனுமதிக்கப்பட்டது.**

| | | |
|---|---|---|
| 28.03.2018 | **பொருள் – 23**<br>இந்நகராட்சியில் 2018–19–ம் ஆண்டிற்கு அலுவலக உபயோகத்திற்குத் தேவையான எழுதுபொருட்கள், படிவங்கள், கணினி சேவை மையத்திற்கு தேவையான ரசீதுகள், டோனர்கள், பிரிண்ட்டிங் ரிப்பன், A4, A3 பேப்பர் வாங்கவும் மற்றும் டோனர்கள் Refill செய்யவும் உத்தேச செலவினம் ரூ.10.00 (பத்து இலட்சம்) இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>இச்செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம். | **தீர்மான எண்.329**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 28.03.2018 | **பொருள் – 24**<br>இந்நகராட்சியில் புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள முன்வைப்புத் தொகையாக ரூ.9.00 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஐந்து முறை கோரப்பட்டதில் முன்வைப்புத் தொகை கூடுதலாக உள்ளது என தெரிவித்து யாரும் ஏலம் கோர முன்வரவில்லை.<br>ஏற்கனவே இருந்த பழைய பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு முன்வைப்புத் தொகையாக ரூ.1.00 இலட்சமும், கூடுதல் காப்புத் தொகையாக ரூ.2.00 இலட்சமும் நிர்ணயம் செய்யப்பட்டு ஏலம் கோரப்பட்டுள்ளது. மேலும் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் மட்டுமே வசூல் செய்யப்படுவதாலும் ஏலதாரருக்கு நகராட்சி கட்டிடங்கள் மற்றும் சொத்துக்கள் ஏதும் ஒப்படைக்கப்படுவதில்லை என்பதால் முன்வைப்புத் தொகையை மறு நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>நிர்ணயம் செய்யப்பட்ட ஏல முன்வைப்புத் தொகை ரூ.9.00 இலட்சத்திலிருந்து 50% குறைவு செய்து ரூ.4.50 இலட்சமாக நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.330**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 28.03.2018 | **பொருள் – 25**<br>இந்நகராட்சியில் 28.03.2018ல் நடைபெற்ற பொது ஏலத்தில் நகராட்சி நாளங்காடி க.டண கழிப்பிடம் ஏலம் கோரப்படாததாலும், ஒப்பந்தப்புள்ளி மூன்றாண்டு சராசரியைவிட குறைவாக கோரியாலும், 31.03.2018 –வுடன் மூன்றாண்டு குத்தகை முடிவுற்றதாலும் கட்டண கழிப்பிட வசூலை துறை மூலம் வசூல் செய்ய, கட்டண கழிப்பிட டோக்கன்கள் அச்சடிக்க உள்ளூர் அச்சகத்திலிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. | **தீர்மான எண்.331**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| வ. எண் | அச்சகங்களின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | பிரின்சி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ் & ஜெராக்ஸ் 29, வண்டிப்பேட்டைத் தெரு, மணப்பாறை. (1000 டோக்கன்கள் கொண்ட ஒரு புத்தகத்தின் விலை) | ரூ.242/– |

<table>
<tr><td></td><td>
<table>
<tr><td>2.</td><td>சுனில் கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ் , 20.வ.உ.சி.தெரு, மணப்பாறை<br>(1000 டோக்கன்கள் கொண்ட ஒரு புத்தகத்தின் விலை)</td><td>ரூ.228/–</td></tr>
<tr><td>3.</td><td>ஜோதி பிரிண்டர்ஸ்,57,ரயில்வே ஸ்டேசன் ரோடு,<br>மணப்பாறை.(1000 டோக்கன்கள் கொண்ட ஒரு புத்தகத்தின் விலை)</td><td>ரூ.253/–</td></tr>
</table>
வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சுனில் கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ் , 20.வ.உ.சி.தெரு, மணப்பாறை அவர்களுக்கு வேலை உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
அனுமதிக்கலாம்<br>
(ந.க.எண்25/2018/அ2)
</td><td></td></tr>
<tr><td>28.03.2018</td><td>பொருள் – 26<br>
இந்நகராட்சியின் 2018–19–ம் வருடத்திய வரவு செலவு திட்ட அறிக்கையை (Budget), நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலம் ஏற்படுத்தப்பட்ட கணினி மென்பொருள் மூலம் தயார் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.332<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>28.03.2018</td><td>பொருள் – 27<br>
திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை நகராட்சி நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் – 2017 வாக்காளர் பட்டியல் 5 பிரதிகள் M/s L3 Solutions (I) Pvt Ltd, Chennai அச்சகத்தில் அச்சிட்டு வழஙகியதற்கான கட்டணம் ரூ.2335/– (இரண்டாயிரத்து முன்னூற்று முப்பத்து ஐந்து மட்டும்) வழஙக கோரி மாவட்ட ஆட்சித்தலைவர்/மாவட்ட தேர்தல் அலுவலர் திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.தா5/1317/2017 நாள்.23.03.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையை மேலே கண்டுள்ள நிறுவனத்திற்கு வழஙகுவதற்கும் தொகையை பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
அனுமதிக்கலாம்<br>
ந.க.எண்.0885/2016/இ1</td><td>தீர்மான எண்.333<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>28.03.2018</td><td>பொருள் – 28<br>
நகராட்சி நடுநிலைப்பள்ளியில் பழுதடைந்துள்ளவற்றை சிறப்பு மராமத்து பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
அனுமதிக்கலாம்</td><td>தீர்மான எண்.334<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 28.03.2018 | **பொருள் – 29**<br>நகராட்சி அலுவலகத்தில் தண்ணீர் வசதி செய்தல், கழிப்பிட வசதி மராமத்து செய்தல் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9.90 இலட்சம் மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.335**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 28.03.2018 | **பொருள் – 30**<br>இந்நகராட்சி அலுவலகத்தில் ஈப்பு மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் (ஷெட்) அமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9.95 இலட்சம் மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.336**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 28.03.2018 | **பொருள் – 31**<br>இந்நகராட்சியில் பார்க் ரோடு ஆடு அடிக்கும் இடத்தில் உள்ள 1 முதல் 8 வரை உள்ள கடைகளின் ஏல உரிமத்திற்கு கடை ஒன்றுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள முன்வைப்புத் தொகையாக ரூ.1.50இலட்சம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நான்கு முறை கோரப்பட்டதில் யாரும் ஏலம் கோர முன்வரவில்லை.<br>கோவில்பட்டி சாலையில் உள்ள கடைகளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு முன்வைப்புத் தொகையாக ரூ.0.75 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டு ஏலம் கோரப்பட்டுள்ளது. எனவே பார்க் ரோடு ஆடு அடிக்கும் இடத்தில் உள்ள 1 முதல் 8 வரை உள்ள கடைகளின் ஏல உரிமத்திற்கு கடை ஒன்றுக்கு முன்வைப்புத் தொகையை மறு நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>கடை ஒன்றுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட ஏல முன்வைப்புத் தொகை ரூ.1.50 இலட்சத்திலிருந்து 50% குறைவு செய்து ரூ.0.75 இலட்சமாக நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.337**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

தனி அலுவலர்
மணப்பாறை நகராட்சி